பக்கங்கள் 4 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 ஆவணி 9 றமழான் 9 இதழ்: 194

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-8-77

## குடியேற்றத் திட்டங்களில் அகதிகளுக்கு வீடமைப்பு

### யாழ். றோட்டரிக் கழகம் யோசனை

யாழ்ப்பாணம், வியாழன் உடைமைகள் யாவும் இழந்து உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் உடுத்த துணியுடன் வெளியிடங்களிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேரும் தமிழ்மக்களுக்கு உணவு அளிப்பதால் மட்டும் அவர்களுக்கு வாழ்வு கிடைத்துவிடாதென்றும் குடிபெயர்ந்து வந்துள்ள இந்த மக்களைக் குடியமர்த்த முன்வரவேண்டுமென்றும் யாழ். றோட்டரிக் கழகம் கருதுகிறது. இது சம்பந்தமாக இந்தக்கழகம் திட்டமொன்று தீட்டியிருப்பதுடன் இத்திட்டம் பற்றி யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் ஒரு மகஜரைச் சமர்ப்பித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணமாவட்டத்தில், கொழும்புத்துறையிலும், அரியாலையிலும், திருநெல்வேலியிலும் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புக் காணிகளில் பலர் குடியேறாதுண்டுக் காணிகளையும் குடியிருப்புக்கு வழங்கப்படாமல் இருக்கும் காணிகளையும், வீடு வாசல்களை இழந்து அநாதைகளாக இங்கு வந்துள்ளவர்களுக்கு வழங்கப்படவேண்டுமென்று யாழ். றோட்டரிக்கழகம் இந்த மகஜரில் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

அநாதைகளாக வந்துள்ள மக்களுக்கு குடியிருப்புக்காக இக்காணிகள் பங்கிட்டு வழங்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளில் யாழ்.

[3-ம் பக்கம் பார்க்க]

# 1800 அகதிகளுடன் நாளை வரும் கப்பல்கள்!

## பருத்தித்துறையில் சனியன்று கரையிறங்குவர்

**கொழும்பிலிருந்து 1800 தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு வடக்கே வரும் முதலாவது மூன்று கப்பல்கள், நாளை வெள்ளிக்கிழமை இரவு பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. அன்றிரவு அகதிகள் கப்பலிலேயே தங்குவார்கள். மறுநாள் சனிக்கிழமை காலை அவர்கள் கரையிறக்கப்பட்டு பஸ்களில் அவரவர் இடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுவார்கள். அகதிகளாக வருபவர்களை வரவேற்பதற்கோ, அவர்களைப் பார்ப்பதற்கோ துறைமுகத்திற்கு வரவேண்டாமென்றும், இதன் மூலம் வீண் இடையூறுகள் ஏற்படுவதற்கு இடமளிக்கவேண்டாமென்றும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

அகதிகளை கப்பலிலிருந்து இறக்கிக் கரைக்குப் பவுத்திரமாகக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைக் கப்பல் ஏஜண்டும் முன்னாள் காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவருமான திரு. க. ஜெயபாலசிங்கம் கவனித்துவருகிறார்.

பொலிசார், இராணுவத்தினரின் உதவி கோரப்படவில்லையென்றும் கடற்படையினரை மட்டும் சில தேவைகளுக்காக உதவிக்கு அழைத்துள்ளதாக திரு. ஜெயபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

### 6 பஸ்களில் 300 பேர்

அநுராதபுரத்தை அடுத்துள்ள பகுதிகளிலிருந்து அகதிகளாக அநுராதபுரம் வந்து சேர்ந்துள்ள சுமார் முன்னூறு பேர் ஆறு பஸ்களில் நேற்றிரவு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு வந்துசேர்ந்தனர். இவர்கள் இன்று காலை அவரவர் இடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கப்படுவர்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில்கடந்தஇரண்டு நாட்களாக தினமும் ஆறுஏழு தடவைகள் விமான சேவை நடைபெற்றுவருகிறது. கலவரம் காரணமாகக் கொழும்பு மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்து வெளியேறுபவர்கள் விமானத்தில் வந்துகொண்டிருக்கின்றனர். விமானத்தில் இடம்பிடிப்பதற்காக விமான நிலையத்திலேயே இவர்கள் காத்துநிற்கின்றனர்.

அகதிகள் முகாமாக இருந்த யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் இப்போது அகதிகள் வந்ததும் அவர்களை உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கும் ஒரு தங்குமடமாக உபயோகிக்கப்படுகிறது.

### யாழ்ப்பாணத்தில் சம்பவங்களில்லை

யாழ்ப்பாண நகரம் வழமையான நிலைமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. நேற்றுக் கடைகள் திறக்கப்பட்டன. சந்தைகளிலும் வியாபாரம் நடைபெற்றது. பஸ், ரயில் சேவைகள் நடைபெற்றன. அரசாங்க காரியாலயங்களில் அலுவல்கள் நடைபெற்றன. வங்கிகளிலும் அலுவல்கள் நடைபெற்றன. பல கடைகளில் பொருட்களின் விலைகள் இரட்டிப்பாக இருந்தன. பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் பிள்ளைகள் செல்லவில்லை. வீதிகளில் பொலிஸ், இராணுவம் கடற்படை ஆகியவற்றின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. கடந்த 48 மணி நேரத்தில் பொலிஸ் தாக்குதல் பற்றியோ இராணுவத்தாக்குதல் பற்றியோ எந்தவித புகாரும் பொதுமக்களிடமிருந்து கிடைக்கவில்லையென பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மாதகலில் இராணுவம் சிலரை அடித்ததாக மட்டும் நேற்று முன்தினம் ஒரு புகார் கிடைத்ததாகவும் அந்த அதிகாரி கூறினார்.

### தொகுதிகள் தோறும் முகாம்கள்

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் வெளியூர்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றனர்நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட 'யாழ்தேவி'யில் பெருந்தொகையானோர் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை, யாழ்.இந்துக்கல்லூரி ஆகியவை அகதிகள் முகாம்களாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கின்றன.

நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க இணைப்பு அதிகாரி தலைமையில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் தொகுதிகள் தோறும் அகதிகள் முகாம்கள் அமைப்பது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டது. அகதிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் அவர்களை நன்கு கவனிப்பதற்கும் இது வசதியாக இருக்குமென்றும் கருதப்பட்டது. இந்த மாநாட்டில் தமிழர் கூட்டணி எம்.பிக்கள் திருவாளர்கள் வீ.என்.நவரத்தினம், சி கதிரவேலுப்பிள்ளை, க துரைரத்தினம் ஆகியோரும் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அகதிகள் புனர்வாழ்வுக்கென பிரஜைகள்குழுவொன்று நியமிப்பது பற்றியும் இந்த மநாட்டில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

### பொலிஸ் சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பில் கொட்டாஞ்சேனைப்பகுதியில் நேற்றுக் காலை ஒரு தமிழ்க் கடையைக் கொள்ளையடிக்க முயன்று கொண்டிருந்த ஒரு கூட்டத்தைக் கலைப்பதற்குப் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் ஒருவர் ஸ்தலத்திலேயே மாண்டார். கிரிலப்பனையிலும் பொலிசார் நேற்றுத் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் நால்வர் காயமடைந்தனர். கொழும்பிலும் அதன் சுற்றுப் புறப்பகுதிகளிலும் சில சில இடங்களில் தொடர்ந்துகொள்ளையடித்தல் தீவைத்தல் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தன இரத்மலானை, மகரகம போன்ற பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் பெரும்பாலும் அங்கிருந்து குடிபெயர்ந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

கொழும்புக்கு வெளியேயிருந்து வந்து பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் அதைஅடுத்துள்ள ஆலயங்களிலும் நிறைந்துள்ள அகதிகளுக்கு இடவசதி போதாமையால் இப்பொழுது சென்பீட்டர்ஸ்கல்லூரியிலும் அகதிகள் தங்கியுள்ளனர்.

## அகதிகள் வாழ்வுக்கு புனரமைப்புச் சங்கம்

### பிரமுகர்கள் ஒன்றுகூடி அமைத்தனர்

யாழ்ப்பாணம், வியாழன் நாள் தோறும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்து குவியும் அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் இன்று டாக்டர் யோகு பசுபதியின் இல்லத்தில் சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினத்தின் அழைப்பின் பேரில் வடபகுதியிலுள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர்.

வண பிஷப் அம்பலவாணர், வண. எம் ஏ. இரத்தினராஜா, வண தியோகுப்பிள்ளை பிஷப்பின் பிரதிநிதிகள் திவ்விய ஜீவன

(3-ம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு புனர்வாழ்வு வேண்டும்; உபசாரமல்ல!

யாழ்ப்பாணம், வியாழன் கலவரத்தால் பாதிக்கப்பட்டு வெளியூர்களிலிருந்து அகதிகளாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு உதவியளிப்பதற்காக, மக்களின் வரிப் பணத்திலிருந்து நாற்பதினாயிரம் ரூபாயைச் சமூக சேவைத் திணைக்களம் ஒதுக்கியிருக்கிறது. கடந்த நான்கு, ஐந்து தினங்களாக ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு வந்து தங்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர் ஒரு சிலர் இந்த முகாம்களில் தங்கியிருக்கின்றனர். இந்த முகாம்களில் இவர்களுக்கு அளிக்கப்படும் உணவு மற்றும் வசதிகள் யாவும் பொதுமக்களின் நன்கொடையினாலும் உதவிகளினாலுமே நடைபெறுகின்றது. சமூகசேவைப் பகுதி ஒதுக்கிய நாற்பதினாயிரம் ரூபாயில் சிறிதளவேனும் இதற்குச் செலவழிக்கப்படவில்லை என்று அறிகிறோம். அகதிகளின் புனர்வாழ்வுக்குச் செலவிடப்படவேண்டிய பணத்தை இப்போது அகதிகளை உபசரிப்பதற்காக வீணாகச் செலவிடுவது நல்லதல்ல. சமூகசேவைத் திணைக்களம் ஒதுக்கிய பணத்தை இதற்காகச் செலவிடலாம்.

இவ்வாறு சட்டத்தரணியும்

(3-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் சதி?

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறைச்சம்பவங்களுக்கு அரசியல் சதியே பின்னணியில் இருப்பதாகஅரசாங்கம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இலங்கைத்தமிழர் நிலைமை:

# மந்திரி ஒருவரை அனுப்பி தகவல்களை அறிக!

# மொரார்ஜிக்கு எம். ஜி. ஆர் தந்தி

சென்னை ஆகஸ்ட் 24

**இலங்கையில் வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களையும் பாதிக்கப்பட்ட இடங்களையும் நேரில் சென்று பார்வையிடுவதற்கு மத்திய அமைச்சர் ஒருவரை இலங்கைக்கு அனுப்பும்படியும் தமிழ்மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்வகையில் சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்குமாறும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயைக் கோரியுள்ளார்.**

திரு. மொரார்ஜிக்கு இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தி ஒன்றிலேயே திரு. எம், ஜி. ஆர். மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்படுகின்றன சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. இவற்றிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்குவேண்டிய சகல சாத்தியமான உதவிகளையும் இந்திய அரசு செய்யும் எனத் தாம் நம்புவதாகவும் திரு,எம். ஜி. ஆர் தமது தந்தியில்தெரிவித்துள்ளார்.

### நாஞ்சில் தகவல்

இதேவேளையில் இலங்கையிலுள்ள இந்திய – இலங்கை தமிழ்மக்களின் நிலைகுறித்து தாம் இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு வாஜ்பாயியுடன் தொடர்புகொண்டு விசாரித்ததாகவும் இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறதாகஅவர் தெரிவித்ததாகவும் தமிழ்நாடு நிதிஅமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் தமிழ்நாடு சட்ட மேல்சபையில் தெரிவித்தார். (இ)

# ஜெயப்பிரகாசருக்கு செருப்பு வீச்சு

பட்னா, ஆக 24

பட்னாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்திரு.ஜெயப்பிரகாஷ்நாராயண் பேசிக்கொண்டிருந்தபோது காங்கிரஸ் கட்சித் தலைவரின் 14 வயது மகன் ஒருவன் திரு. ஜெயப்பிரகாஷரை நோக்கி தமதுசெருப்பைவீசினாராம்.

செருப்பு மைக்கை மட்டுமே தாக்கியது.

# கடத்தப்பட்ட கார் அனாதரவாகக் கிடந்தது

மாவிட்டபுரம், புதன்

கொக்குவிலில் வைத்து கடத்தப்பட்ட கார் காங்கேசன் துறையில் வைத்துக் கைப்பற்றப்பட்டதுடன் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 19-ம் திகதி பகல் கே. கே எஸ். வீதியில் வைத்து யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து கொண்டிருந்த ஒரு வெள்ளை நிறக்கார் கடத்திச் செல்லப்பட்டது.

இக்கார் காங்கேசன் துறையை அடுத்துள்ள கூத்தியவைத்தை என்ற இடத்தில் அனாதரவாக விடப்பட்டுக் கிடந்தது. காங்கேசன்துறைப் பொலிசாருக்குத்தகவல் எட்டியதும் அவர்கள் ஸ்தலத்துக்குச் சென்று காரைக் கைப்பற்றி பொலிஸ்பாதுகாப்பில் வைத்தனர்.

இக்கார் கடத்தப்பட்ட சமயம் காரில் இருந்த நைஜீரியா உணவு விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் எம். இராமசாமி மேல் இடத்துடன் தொடர்பு கொண்டதன் பேரில் கார் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

# இலங்கைத் தமிழரின் உடனடி தேவையை நிறைவேற்றவும்

## ஜனதா பிரமுகர் கோரிக்கை

சென்னை, ஆக. 24

வன்முறைச் சம்பவங்களினால் அவதியுறும் இலங்கைத் தமிழ்மக்களுக்கு வேண்டிய சகல உடனடித் தேவைகளையும் உடன் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமரையும், வெளியுறவு அமைச்சரையும் தமிழ் நாடு ஜனதா கட்சிப் பிரமுகர் டாக்டர் சந்தோஷம் கேட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் இன்றைய உடனடித் தேவைகளை பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் உடன் நிறைவேற்றுவார் எனத்தாம் நம்புவதாகவும் டாக்டர் சந்தோஷம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கலவர நிலைமை பற்றி நன்கு ஆராய்ந்த பின்னர் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடும் பட்சத்தில், அது இந்தியாவிலுள்ள தமிழ் மக்களுக்குப் பெரிதும் ஆறுதலாக இருக்கும் என்றும் டாக்டர் சந்தோஷம் தமது தந்தியில் கேட்டுள்ளார்.

# விலைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வியா

நாட்டில் நடைபெற்ற அசம்பாவிதங்களை அடுத்து யாழ். மாவட்டத்தில் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

# இந்தியதூதர் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்ப்பார்!

புதுடில்லி, ஆக. 25

இலங்கையில் இடம் பெற்ற வன்முறைச்சம்பவங்களினால் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து இந்திய அரசு கவலை தெரிவித்துள்ளது.

அத்துடன் வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பாதிக்கப்பட்ட மக்களையும் உடனடியாகச் சென்று பார்வையிடுமாறு இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவரை இந்திய அரசு பணித்துள்ளது.

வன்முறைச் சம்பவங்களை இலங்கை அரசு உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் என்றும் இலங்கை வாழ் இந்திய மக்களுக்கு அரசு போதிய பாதுகாப்பு வழங்கும் என்றும் தாம் நம்புவதாகவும் இந்திய வெளியுறவுக் காரியதரிச திரு. வெள்ளோடி, இந்தியாவில் உள்ள இலங்கையின் தற்காலிக தூதுவர் திரு. ஜயக்கொடியிடம் தெரிவித்தார்.

இலங்கையில் இடம் பெறும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஆராயும் பொருட்டு திரு. ஜயக்கொடியை புதுடில்லியில் உள்ள இந்திய வெளிபுறவு இலாகாவிற்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்திய போதே திரு. வெள்ளோடி மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்திருந்தார். (இ)

# அகதிகளுக்கு உதவுமாறு

## ச. ச. நிலையங்களுக்கு கோரிக்கை

**யாழ்ப்பாணம், வியா**

"யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல சனசமூக நிலையங்களும் வன்முறைச் சம்பவங்களினால் தமது வீடு வசல் உடைமைகளை இழந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவனியா ஆகிய பகுதிகளில் அகதிகளாக உள்ள தமிழ் பேசும் மக்களின் எதிர்கால வாழ்வுக்கு தம்மாலான பணிகளை உடன் மேற்கொள்ள வேண்டும்.'

இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாஜ செயலாளர் திரு எஸ் கே. சண்முகலிங்கம் சகல சனசமூக நிலையங்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தமது கோரிக்கையில் மேலும் தெரிவிப்பதாவது:

"தற்போது அகதிகளாக முகாம்களில் பாதுகாப்பு அளிக்கப்பட்டவர்களுக்கு உடை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட தொண்டர்கள் மூலம் உணவு, உடை சேகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறேன். அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கையை எமது சமாஜம் விரைவில் கூடி அதற்கான திட்டத்தை செயல்படுத்தும். அதுவரை உடனடியாக உங்கள் கிராமங்களில் ஒவ்வோர் இல்லமாக உணவும் உடையும் சேகரித்து உதவுமாறு வேண்டுகிறேன்" என குறிப்பிட்டுள்ளார். (கெ-இ)

# விசேட லீவு நாட்கள்

யாழ்ப்பாணம், வியா

'அரச ஊழியர்கள் இன்று வேலைக்கு செல்வர்" என்ற நேற்றைய செய்தியில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஐந்து நாட்களும் ஊழியர்களுக்கு லீவு நாட்களாகக் கருத படுமென்பது தவறானதாகும். இந்த லீவு விசேட லீவாக கருதப்படுமென மாநாட்டில் உறுதிசெய்யப்பட்டுள்ளது என, தொழிற்சங்கங்களின் கூட்டணி இணைச்செயலாளர்களான திருவாளர்கள் வே. பொன்னம்பலமும், இ. கிருஷ்ணபிள்ளையும், 'ஈழநாடு' திருபருக்குதெரிவித்தனர். (கெ)

# "தமிழக எம்.பிக்களை அனுப்பி வைக்குக"

சென்னை, ஆக. 24

"இலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆறுதல்கூறதமிழக எம். பிக்கள் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புக"

இவ்வாறு தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் மத்திய அரசைக் கேட்டுள்ளார்,

இலங்கைத் தமிழ்மக்களுக்கு நேர்ந்துள்ள பரிதாபகரமான நிலை குறித்து தமது கட்சி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்றும் திரு. கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார். (இ)

# தவறணை தீக்கிரை

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு பெரிய விமான் வீதியிலுள்ள கள்ளுத் தவறணை இரவுவேளையில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இனந்தெரியாத விஷமிகளின் செயலாக இது இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

# வெங்காய உற்பத்தியாளர் கவலை

பண்டத்தரிப்பு, புதன்

தாங்கள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த வெங்காயத்தை விற்பனை செய்ய முடியாது இப்பகுதி விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

# கச்சாய் உப்பளம் புனரமைக்கப்படும்

கொடிகாமம், புதன்

யாழ்ப்பாணத்தில் பாரிய தொழில் வசதிப் பொருளாதாரத்திட்டமாக அமைந்த கச்சாய் உப்பளம் மீண்டும் புனரமைப்புச் செய்யப்படவிருக்கிறது.

கடந்த ஐ தே.கட்சி அரசாங்கத்தின்கீழ் பலலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட கச்சாய் உப்பளம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முயற்சியால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் நோக்குடனும் உப்பு உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும் புனரமைப்புச் செய்யப்படவிருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது

இவ்வுப்பளம் மீண்டும் செயல்படுவதன் மூலம் இரண்டாயிரத்துக்குமதிகமான வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமென நம்பப்படுகிறது. (அ)

# "கரைச்சல்வரும் போங்கோ என்று எச்சரிக்கை செய்தேன்"

## மரணவிசாரணையில் கான்ஸ்டபிள்சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா

"நீங்கள் இந்த வேலை செய்யவேண்டாம். நிற்பாட்டுங்கள். நீங்கள் நிற்பாட்டாவிட்டால் உங்களுக்கு கரைச்சல் வரும் போங்கோ" என்றுகடைக்கு முன்னால் நின்ற கூட்டத்தினரை எச்சரிக்கை செய்தேன்.

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானமூவரின்மரண விசாரணையில் சாட்சியமளித்த யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் டொன் அலோசியஸ் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதவான் திரு கே.வி. நவரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலை மரணவிசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

### "கலவரம் என்றூர்கள்"

கான்ஸ்டபிள் டொன் அலோசியஸ் தொடர்ந்து கூறியதாவது: "நான் பொலிஸ் நிலையத்திற்கு பின் உள்ள வீட்டில் இருந்தபோது அழைப்பு வந்தது. பொலிஸ் நிலையத்தில் றிசேவ் சார்ஜன்ட் இருந்தார். யாழ்ப்பாணநகரம் பற்றிஎரிவதாகவும் கலவரம் நடப்பதாகவும் என்னிடம் கூறி தயாராகும்படி சொன்னார். வாகனத்தில் சென்றோம் மெண்டிசையும் என்னையும் விட 6 பேர் இருந்தார்கள். 5 பேர் றைபிள் வைத்திருந்தனர் நகரத்தை நோக்கிச்சென்றோம். மற்றும் இரு பொலிஸ் ஜீப் வண்டிகளும் சென்றன.

"நாங்கள் நாகவிகாரைப்பக்கம் நோக்கிச் சென்றோம். எதிரே பலத்த சத்தம் கேட்டது. மக்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.

**நீதவான்:** என்ன கூறினார்கள்?

**கான்ஸ்:** தெரியாது. சிறிது தூரத்திற்கு அப்பால் புகை கிளம்பிக்கொண்டிருந்தது.

**நீதவான்:** எவ்வளவு தூரத்தில் வாகனத்தை நிறுத்தினீர்கள்?

**கான்ஸ்:** 25 யார் தூரத்தில்.

### நெருப்பு எரிந்தது

**நீதவான்:** பின் என்ன நடந்தது?

**கான்ஸ்:** கடை ஒன்று சேதப்படுத்தப்பட்டது. வீதியில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது கடைக்கு எதிரில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. கூட்டத்தினர் அக்கடையைக் கொள்ளை அடித்துக் கொண்டிருந்தனர். சிலர் கொள்ளையடித்த சாமான்களை நெருப்பில் போட்டுக்கொண்டிருந்தனர்.

**நீதவான்:** என்ன சாமான்கள்?

**கான்ஸ்:** எனக்குத் தெரியாது.

**நீதவான்:** கூட்டத்தில் எத்தனைபேர் இருந்தனர்?

**கான்ஸ்:** சுமார் 500 பேர், எல்லாம் கடைச்சாமான்களை எடுத்துக் கொண்டிருந்தனர். நாங்கள் 10 யார் முன்னேறினோம் கூட்டத்தினருக்கு சமீபத்தில் சென்றோம். அவர்கள் கற்கள் போத்தல்கள் வீசத் தொடங்கினார்கள். கடைச் சாமான்களை தீயில் போட்டு எரித்தார்கள்.

**நீதவான்:** என்ன சாமான்கள் என்று தெரியுமா?

**கான்ஸ்:** தெரியாது. கூட்டத்தினரை எச்சரிக்கை செய்யும்படி இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் என்னிடம் கூறினார்.

**நீதவான்:** எச்சரிக்கை செய்தீரா?

**கான்ஸ்:** தமிழில் எச்சரிக்கை செய்தேன்.

**நீதவான்:** எப்படியான சத்தம்?

**கான்ஸ்டபிள்:** வன்முறையிலீடுபடும் சத்தம்.

**நீதவான்:** எப்படி?

**கான்ஸ்:** நீங்கள் இந்த வேலை செய்யவேண்டாம். நிற்பாட்டுங்கள் என்றேன்.

**நீதவான்:** அதன்பின்?

**கான்ஸ்:** நீங்கள் நிற்பாட்டாவிடில் உங்களுக்கு கரைச்சல் வரும் போங்கோ என்றேன்.

**நீதவான்:** கூட்டத்தினர் என்ன செய்தார்கள்?

**கான்ஸ்:** எச்சரிக்கையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்து போத்தலாலும், கற்களாலும் எறிந்து கொண்டிருந்தனர்.

### சுடுவோம் என்றோம்

**நீதவான்:** பிறகு?

**கான்ஸ்:** நிற்பாட்டாவிட்டால் சுடுவோம் என்றேன் அதன்பின்பும் நிற்பாட்டவில்லை. 2-ம் முறை எச்சரிக்கை செய்தேன் அப்போது எங்கள் முன்னால் ஒரு வெடி வெடித்தது. இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் ஒருமுறை சுடுமாறு உத்தரவிட்டார். கூட்டத்தினரை நோக்கி ஒரு தடவை சுட்டேன். அவர்கள் அசையவில்லை, எவரும் விழவில்லை. தொடர்ந்து போத்தல் வீசினார்கள்.

### மீண்டும் சுட்டோம்

**நீதவான்:** மீண்டும் சுடும்படி உத்தரவு கிடைத்ததா?

**கான்ஸ்:** இன்ஸ்பெக்டர் மெண்டிஸ் மீண்டும் சுடும்படி உத்தரவிட்டார். மற்றும் 3 பொலிசாருக்கு சுடும்படி உத்தரவிட்டார். 4 பேர் கூட்டத்தை நோக்கி ஒரு தடவை சுட்டோம். கூட்டத்தனர் கலைந்து ஓடிச்சென்றனர். கூட்டத்திலிருந்து ஒருவர் விழுந்தார் அவரை கூட்டத்தினர் தூக்கிச் சென்றனர். கூட்டத்தினர் தாங்கள் கொள்ளையடித்த பொருட்களையும் கொண்டுசென்றனர். கடைக்கு அருகில் ஒரு துப்பாக்கியைக் கண்டெடுத்தேன். பல்வேறு சாமான்கள் தீயில் எரிந்துகொண்டிருந்தது. உதவிப் பொலிஸ் அதிபர் அவ்விடத்திற்கு வந்தார் ஒன்றரை மணி நேரம் அங்கு நின்றோம்.

விசாரணை இன்று காலை 10-30 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

## உடைந்த நிலையில் சிலைகள்!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சில தமிழ்ப்பெரியார்களின் சிலைகள் உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தசமயம் இவை உடைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

உடைக்கப்பட்ட சிலைகளில் சத்திரத்துச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த வள்ளுவரின் சிலை உடைக்கப்பட்டு வள்ளுவரின் தலை பின்புறமாக சரிக்கப்பட்டும் கைகள் உடைக்கப்பட்டுமுள்ளன.

அதேபோன்று புதியசந்தைக்கு எதிரே நிர்மாணிக்கப்பட்டிருந்த ஔவையார் சிலையும் தலை நொறுக்கப்பட்டுள்ளதுடன் கரங்களும் உடைக்கப்பட்டுள்ளன. பஸ்நிலையத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த சோமசுந்தரப்புலவரின் சிலையும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குடாநாடெங்கும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் ஆங்காங்கே பரவலாக நடைபெற்றுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. (கா)

## அகதிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமரர் திருச்செல்வம் அமைச்சராக இருந்தபோது அவரின் அந்தரங்கச் செயலாளராக இருந்தவருமான திரு. இ பாலசுப்பிரமணியம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் மக்கள் அல்லர் படும் இச்சமயத்தில் அவர்களிடமே கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்குச் சில வர்த்தகர்கள் முனைவது வேதனைக்குரியதென்றும், இந்தச் செயலை அவர்கள் உடன் நிறுத்திக்கொள்வது அவசியமென்றும் திரு. பாலசுப்பிரமணியம் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## அமைதி வேண்டி பிரார்த்தனை

சுழிபுரம், புதன்

நாட்டில் ஏற்பட்டுள்ள வன்செயல்கள், அமைதியின்மையாவற்றையும் பிரார்த்தனை மூலம் குறைத்துக்கொள்ள பஜனைச் சபையினர் ஆங்காங்கேயுள்ள ஆலயங்களில் சில மணி நேரம் காந்தியவழிபாட்டுப் பிரார்த்தனைகள் நடாத்துமாறு வழுக்கம்பரை சனசமூக பஜனை சபையினர் வேண்டியுள்ளனர். வழக்கம்பரை அம்மன் கோயிலில் பலர் கூடி பிரார்த்தனை செய்தனர். பஜனைச் சபையினர் தினமும் மாலையில், நாட்டில் அமைதி ஏற்படும்வரை பிரார்த்தனை நடாத்தி வருகின்றனர்.

## பாதிக்கப்பட்டவர்களை இந்தியத்தூதர் சந்தித்தார்

கொழும்பு, புதன்

வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களையும் பாதிக்கப்பட்ட இடங்களையும் இந்தியத்தூதுவர் திரு குர்பச்சான்சிங் விசேட ஹெலிகொப்டர் விமானத்தில் சென்று பார்வையிட்டார்.

இவருடன் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யு. ரி. ஜெயசிங்காவும் இந்தஇடங்களுக்குச் சென்றார்.

கண்டி, மாத்தளை, குருநாகல் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களிலுள்ள 10 ஆயிரம் இந்திய அகதிகளை தூதுவர் சென்று பார்வையிட்டார்.

இதேவேளையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் வீடிழந்தவர்களுக்குவீடுகட்டிக்கொடுக்கப்படும் என்றும் தமக்கு இலங்கை அரசு உறுதி அளித்துள்ளதாக இந்திய தூதுவர் தெரிவித்துள்ளார். (இ)

## பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. சேவை

பண்டத்தரிப்பு, புதன்

வெளிமாகாணங்களில் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்து யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கு பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் உணவுப் பொருட்களையும் மற்றும் உடைவகைகளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள். மேற்படி பொருட்கள் சங்க லொறி மூலம் எடுத்துச் செல்லப்பட்டு அன்பளிப்பு செய்யப்பட்டன. (அ)

## குடியேற்றத்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோட்டரிக்கழகம் தன்னாலான சகலஉதவிகளையும் அளிக்க முன்வருமென்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## ஈழத்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"இலங்கையில் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து நாம் ஒரு தனிக்கட்சித் தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளோம். இத்தீர்மானம், நாலரைக் கோடி தமிழ் மக்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கின்றது.

"இலங்கை எமது அண்டை நாடு இந்தியாவிலிருந்து சென்ற மக்கள் அங்கு குடியேறி, அந்தத்தீவை செல்வம் கொழிக்கும் பூமியாக மாற்றினார்கள். ஆனால் இன்று அங்கு நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் நமக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுக்கிறது. வெளிநாட்டு விவகாரங்களில் நாம் தலையிடுவதில்லை. ஆனாலும் இலங்கையில் தமிழர்கள் பாதிக்கப்படும்போது அதனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது மனித உரிமைகள் எங்கு மீறப்படுகிறதோ அங்கு நாம் குரல் கொடுத்தேதீர வேண்டும் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக இருந்தால் அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

"இலங்கையில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்த இலங்கை அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். இதனுடன் தமிழருக்குப் போதுமான பாதுகாப்புக்களையும் வழங்கி, அவர்களின் உயிரும் உடைமைகளும் காப்பாற்றப்படவேண்டும். வன்முறைகளை நிறுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"நமது தீர்மானத்தில், மத்திய அமைச்சர் ஒருவரை இலங்கைக்கு அனுப்பி, அபரம் திரட்டி இங்கு திருப்பியதும் அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யும்படி மத்திய அரசைக் கோரியுள்ளோம்.

"இந்த ஏற்பாட்டைச் செய்வதன் மூலம் உண்மை நிலையை நாம் அறியமுடிவதுடன் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு ஆறுதலாகவும், அங்கு அமைதி ஏற்படவும் வழிபிறக்குமென்று நம்பலாம்" என்று அமைச்சர் நாஞ்சில் மனோகரன் குறிப்பிட்டார்.

## சபையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நஷ்டஈடு வழங்கவேண்டும் என்ற அம்சத்தையும் பிரேரணையில் சேர்க்கவேண்டும் என்று கூறினார். இந்த யோசனைமட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு. எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்த மற்றைய நல்லெண்ணத் தூதுக்குழு" சம்பந்தமான) பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டன

## ஜனார்த்தனன் உண்ணாவிரதம்

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் டாக்டர் ஜனார்த்தனன் நேற்று உண்ணாவிரதம் இருந்தார். இலங்கைத் தமிழருக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்றும், அவர்களின் உயிரும் உடமைகளும் காப்பாற்றப்படவேண்டும் என்று கோரி டாக்டர் ஜனார்த்தனன் நேற்று உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இவருடன் வேறு சிலரும் உண்ணாவிரதமிருந்தனர். பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு அவர் அனுப்பி வைத்த தந்தியொன்றில் ஈழத்தமிழர் பிரச்னையை ஐக்கியநாடுகள் சபையில் கிளப்ப முயற்சிக்கும்படியும் இலங்கைத் தமிழர் பிரச்னையில் தலையிடுமாறும் கேட்டுள்ளார். டாக்டர் ஜனார்த்தனன் நேற்று முன்தினம் சென்னையிலிருந்து கொழும்பு சரஸ்வதி மண்டபத்துடன் தொடர்புகொண்டு அங்குள்ள அகதிகள் நிலைமை பற்றிக் கேட்டறிந்தார்.

## அகதிகள் வாழ்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கப்பிரதிநிதிகள், இந்துமாமன்றப் பிரதிநிதிகள், சாரணர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், ரோட்டரி, லயன்ஸ் கிளப் பிரதிநிதிகள், எம். பிக்கள், வ.ந.நவரத்தினம், க. துரைரத்தினம், வண்ணை ஆனந்தன், திரு.நேசையா, திரு. லங்கா நேசையா, ஜரூப் சகீட், சிவதர்மவள்ளல், க. கனகராசா, திரு. நா. த. செல்லத்துரை, திரு.நடராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

டாக்டர். யோகு பசுபதி தலைமையில் தமிழ் அகதிகள் வாழ்வுப் புனரமைப்புச்சபை அங்குரார்ப்பணம்.

அகதிகள் வாழ்வுக்கு வழிவகுக்கும் முக்கிய தீர்மானங்கள்.

புனருத்தாரண நல்வாழ்வுக்கு அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு உதவியாக இருக்கும் அதே சமயம் பொதுமக்களிடமிருந்து போதிய பண உதவியும் பொருளுதவியும் பெற்று அகதிகளின் நிரந்தர நல்வாழ்வுக்கான திட்டங்களையும் செயல்படுத்துமெனக் கூறப்படுகிறது.

இவ்வியக்கத்தின் இணைப் பொருளாளர்களாக திரு. லங்கா நேசையாவும் (வர்த்தக வங்கி முகாமையாளர்) ரோட்டரி கிளப் தலைவர் திரு. ஆர். ரி. குணரத்தினம் ஆகியோரும் இணைச் செயலாளர்களாக திரு. க. துரைரத்தினம், திரு க. நடராசா ஆகியோரும் பத்துப்பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இக்குழு இன்று பிற்பகல் அரசாங்க செயலகத்தில் அரசாங்க இணைப்பதிகாரியையும் மற்றும் அரசாங்க அதிகாரிகளையும் சந்திக்கும்.

அகதிகள் புனர்வாழ்வுக்கு நிதி உதவி அளிப்பது சம்பந்தமாக இக்குழு இன்று ஓர் அறிக்கை வெளியிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பேரவை செப். 6ல் கூடும்

கொழும்பு, புதன்

தேசிய அரசுப்பேரவை செப்டம்பர் மாதம் 6ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

# சென்னையில் ஹர்த்தால்!

## கலைஞர் தலைமையில் ஊர்வலம்!

# சட்டசபையில் தீர்மானம்!

## அமைச்சரை அனுப்பக் கோரிக்கை

(சென்னை)

**இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக தமிழர்களுக்கு இழைக்கப் பட்டுவரும் கொடுமைகளின் எதிரொலி; தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரிலும், பாரதத்தின் தலைநகரான புதுடில்லியிலும் நேற்று கேட்டது!**

சென்னை நகரில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் எதுவுமே திறக்கப்படவில்லை. பஸ்கள் சேவையிலீடுபடவில்லை. போக்குவரத்துகள் நேற்றுக் காலையில் ஸ்தம்பித்தன. இவற்றின் சிகரமாக கலைஞர் கருணாநிதி தலைமையில் காலையில் மாபெரும் ஊர்வலமொன்றும் மாலையில் பிரமாண்டமான பொதுக்கூட்டமும் நடைபெற்றன. இவற்றுள் தமிழக சட்டப் பேரவையில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளைக் கண்டித்து தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டதுடன் இந்திய மத்திய அரசின் கவனத்துக்கும் சில விஷயங்கள் கொண்டுவரப்பட்டன. புதுடில்லியில் நேற்று இலங்கைத்தமிழர்களின் நிலை குறித்து இலங்கை அரசுடன் மத்திய அரசு தொடர்பு கொண்டது. இலங்கைத் தமிழர்களின் உயிரையும், அவர்களது உடைமைகளையும் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ளும் என்று இந்திய அரசாங்கமும் மக்களும் நம்புவதாக மத்திய அரசு இலங்கை அரசுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "ஈழத் தமிழருக்கு பாதுகாப்பு அளிக்குக"

## தமிழக சட்டசபையில் நாஞ்சில்

(சென்னை)

தமிழக சட்ட சபை நேற்று துணை சபாநாயகர் திரு. திருநாவுக்கரசு தலைமையில் கூடிய போது, ஈழத்து தமிழரின் அவலநிலை குறித்து பல அங்கத்தவர்கள் குரல் எழுப்பினார்கள்! கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் விஷயத்தில் மத்திய அரசு தலையிடவேண்டும் என்றும் அங்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை நேரில் கண்டறியும் பொருட்டு மத்திய அமைச்சர் ஒருவரை உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுமென்றும் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நேற்று சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை ஆதரித்து காங்கிரஸ் கட்சி, மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, போர்வேர்ட் புளக், உழைப்பாளர் கட்சி, முஸ்லிம் லீக் மற்றும் அ. இ. அ. தி. மு. கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் உரை நிகழ்த்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இன்று காலையில் நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்து கொண்டதால், சபைக்கூட்டத்துக்கு வரவில்லை. இவர்கள் 12 30க்கு சபைக்கு வந்திருந்தனர்.

இலங்கைத் தமிழர்கள் நிலை பற்றிய அரசின் தனித்தீர்மானத்தை, சபை முன்னவரும் நிதிஅமைச்சருமான திரு. நாஞ்சில் மனோகரன் முன்மொழிந்து பேசுகையில் இலங்கையில் தமிழர்கள் கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் விஷயத்தில் உடனடியாகத் தலையிடுமாறு மத்திய அரசை நாம் கோரியுள்ளோம் என்றும் மத்திய அமைச்சர் ஒருவரை இலங்கைக்குஅனுப்பி நேரில் விஷயங்களைத் திரட்டுமாறு மத்திய அரசை கோரியுள்ளோம் என்றும் கூறினார்.

'இலங்கையில் தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த விஷயத்தல் அரசியல் சம்பாத்தியம்பெற நாம் விரும்பவில்லை. இலங்கைத் தமிழர்கள் தங்களுக்குத் தான் சொந்தம் என்ற தோரணையில் திராவிட முன்னேற்றக் கழகம், முன் அறிவிப்பு, முன் அனுமதி பெறாமலேயே ஏதேதோ செய்கின்றன. இப்பிரச்னை ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சிக்கு மட்டும்தான் சொந்தம் என்று கருதிவிடக் கூடாது. மனிதாபிமானத்துக்குப் புறம்பாக எங்கு அநீதி தலைதூக்கப்படுகிறதோ அதனைக்கண்டித்து நாம் நீதிக்குரல் எழுப்புவோம்' என்று குறிப்பிட்ட நிதி அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் மேலும் கூறியதாவது:

(3-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

மாவிட்டபுரம் ஸ்ரீமுருகன் கபே உரிமையாளர் கதிர்காமு வயிரமுத்து காலமாகிவிட்டார். இவர் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், நாகேந்திரம், சிவகணேசதாசன், நாகேஸ்வரி, சர்வேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் தந்தையும் மார்க்கண்டு ஆசிரியரின் மாமனும் சின்னத்துரை, முருகேசு இராசம்மா (கீரிமலை கேணிப் பாதுகாவலர்கள்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கீரிமலை "நித்தியானந்தபவனம்" உரிமையாளர் முருகேசு, மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனருமாவர். பூதவுடல் ஈமக்கிரிகைக்காக 25-8-77 வியாழக்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். 6893

# சபையில் ஒலித்தது!

(சென்னை)

ஈழத்தமிழர் நிலைகுறித்து தமிழக சட்டசபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நேற்றுக் காலையில் நடந்து கொண்ட முறைக்கு சில அங்கத்தவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் பேசுகையில், காலையில் சட்டசபைக் கூட்டத்துக்கு வருவதற்கு தமக்கு பெருஞ்சிரமம் ஏற்பட்டதாகக் கூறினார். தி. மு. கழகத்தினர் திடீரென ஊர்வலம் நடத்தி, ஹர்த்தாலும் அனுஷ்டிக்கத் தூண்டியதால் பஸ்கள் ஓடவில்லை என்றும், எழும்பூரிலிருந்து சட்டசபைக்கு வருவதற்கு வாடகைக் காரை தாம் அமர்த்தி, அதில் வந்த போது காரை இடையில் மறித்தனர்என்றும், பெரும் சிரமமும் கஷ்டமும் அனுபவித்தே இக் கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

இதற்கு தமிழக முதலமைச்சர் திரு.எம். ஜி.ராமச்சந்திரன் பதிலளிக்கையில், சட்டமன்ற உறுப்பினர்கள் சபைக்கூட்டத்துக்கு வருவதைத் தடை செய்யக்கூடாதென்றும், யார் தம்மைத் தடுத்தனர் என்றவிபரத்தை உறுப்பினர்கள் வெளியிட்டால் உரிய நடவடிக்கை எடுக்கமுடியுமென்றும் கூறினார்.

தீர்மானத்தின்மீது மற்றுமொரு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பேசுகையில், இலங்கையில் நடைபெற்ற கொடுமைகளை நேரில் கண்டறிய மத்திய அமைச்சர் ஒருவர் செல்லும் அதே நேரத்தில், தமிழக அமைச்சர் ஒருவரின் தலைமையில் ஒரு குழு சென்றால் மேலும் உதவியாக இருக்கும் என்றும் அபிப்பிராயம் தெரிவித்தபோது, நிதி அமைச்சர் நாஞ்சில் மனோகரன், "மத்திய அமைச்சர் செல்லவேண்டும் என்று நாம் கோருவதால் மற்றுமொரு குழு செல்லவேண்டியது அவசியம் இல்லை என்று கூறினார்.

மற்றுமொரு உறுப்பினர் பேசுகையில், இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழருக்கு

(3ம் பக்கம் பார்க்க)

# லங்கா அரசுடன் தொடர்புகொண்டுள்ளோம்"

## மத்திய அமைச்சர் தகவல்

சென்னை, ஆக. 24

"இலங்கையில் தலைதூக்கியுள்ள வன்முறைச்சம்பவங்களினால் இலங்கை வாழ் தமிழர்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகியிருப்பது மிகவும் துரதிருஷ்டமானது. இலங்கைத் தமிழர்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்க உடனடிநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசிடம் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது".

மத்திய எரிபொருள்அமைச்சர் திரு சி. பி. இராமச்சந்திரன் இன்று சென்னையில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் ஈழத்தமிழர் நிலை குறித்துபேசுகையில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

மத்திய அமைச்சர் திரு. இராமச்சந்திரன் இன்று புதுடில்லியிலிருந்து சென்னைவந்திருந்தார். நிருபர்கள் மத்தியில் அவர் மேலும் பேசியதாவது:

"இலங்கையில்ஏற்பட்டுள்ள வன்முறைகளால் பாதிக்கப்பட்ட தமிழரின் நலன் குறித்து மத்திய அரசு, இலங்கை அரசுடன்தொடர்பு கொண்டுள்ளது. இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொள்ளும் என்று இந்திய அரசு எதிர்பார்க்கிறது என்று'இலங்கைத் தமிழர்களின் உயிருக்கும் அவர்களது உடைமைகளுக்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்து குறித்து எல்லா நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொள்ளுமென்று நம்புவதாகவும் மத்திய அரசு இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளது" என்று அமைச்சர் கூறினார்.

# கலைஞர் தலைமையில் நடந்த ஊர்வலம்!

(சென்னை)

இலங்கையில் தலைதூக்கிய வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், இலங்கை அரசின் கவலையீனத்துக்குக் கண்டனம் தெரிவித்தும் நேற்று சென்னையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலுடன் நேற்றுக் காலையில் மாபெரும் ஊர்வலமும், மாலையில் பகிரங்கக் கூட்டமும் நடைபெற்றன. இந்த ஏற்பாடுகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்திருந்தது.

காலையில், தமிழ்நாடு சட்ட சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் அண்ணா சிலை அருகே ஆரம்பித்த ஊர்வலம் மவுண்ட் ரோட் வழியாக ஊர்ந்து சென்று, சென்னையிலுள்ள இலங்கை உதவி ஹைகமிஷனர் அலுவலகம் முன்பாக நின்றது. ஊர்வலத்தில் ஆண்களும், பெண்களும் குறிப்பாக ஏராளமான இளைஞர்களும் கலந்துகொண்டனர் இவர்கள் பல சுலோகங்களைக் கைகளில் ஏந்திக்கொண்டு, ஈழத் தமிழரின் அவலநிலையைக் கோஷித்த வண்ணம் சென்றனர்.

இலங்கை உதவிஹைகமிஷனரின் அலுவலகத்துக்குச் சென்ற கலைஞர் மு.கருணாநிதி நீண்டதொரு மகஜரை அங்குள்ள உயர் அதிகாரியிடம் கையளித்து, இலங்கைத் தமிழர்களுக்கு நீதி வழங்கப் படவேண்டும் என்றும் ஈழத்து தமிழர்களுக்கு இழைக்கப் பட்ட கொடுமைகண்டு நான்கு கோடி தமிழ் இதயங்களும் கொதிக்கின்றன என்றும், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் இதன்பின்னர், ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

நேற்றுக்காலை சென்னை நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் போக்குவரத்துகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. பஸ்கள் எதுவுமே ஓடவில்லை. நேற்று மாலை கலைஞர் தலைமையில் பெரும் கூட்டமும் நடந்தது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka